
# நூலாசிரியர் துளசி கே. பாலசுப்ரமணியன் விரிவான அறிமுகம்



துளசி கே. பாலசுப்ரமணியன்,
B.E., M.B.A., M.Phil.,Ph.D.,

**1. நிறுவனர், உலக பசுமை வளர்ச்சிக் குழு (Global Green Growth Group)**

துளசி கே.பாலசுப்ரமணியன் உலக பசுமை வளர்ச்சிக் குழு என்ற தொண்டு நிறுவனத்தை நிறுவி பூமித் தாயை கரியமில வாயு பிரச்சனையில் இருந்து காக்க 7300 கோடி துளசிச் செடிகளை உலகம் முழுவதும் வீடுகளில் வளர்க்க வேண்டும் என்ற விழிப்புணர்வை, தமிழ்நாட்டில் இலட்சக்கணக்கான மக்கள் மனதில் கடந்த 3 ஆண்டுகளில் ஏற்படுத்தியவர்.

**2. நிறுவனர், உலக தண்ணீர் ஞானம் (World Water Wisdom)**

சக்கை தண்ணீரில் (RO Water) இருந்து சக்தி தண்ணீருக்கு (Bio Water) மக்கள் மாறி ஆரோக்கியம் காக்க வேண்டும் என்ற விழிப்புணர்ச்சியை தமிழகம் எங்கும் உலக தண்ணீர் ஞானம் என்ற தொண்டு நிறுவனத்தின் மூலம் ஏற்படுத்தி வருகிறார். இயந்திர பொறியாளரான இவரிடம் இலங்கை அரசு அந்த நாட்டின் இரண்டு சிறுநீரகங்களை இழந்த (CKD - Chronic Kidney Disease) ஒரு லட்சம் மக்களை சக்தி தண்ணீர் மூலம் காக்கும் உயர் பொறுப்பை வழங்கி உள்ளது.

**3. பள்ளி நிர்வாகி ( Secretary, Genius Educational Trust )**

துளசி கே.பாலசுப்பிரமணியன், Genius Nursery & Primary School என்ற பள்ளியை 9 ஆண்டுகளுக்கு முன் புதுக்கோட்டை நகரில் நிறுவி சீரும் சிறப்போடும் நடத்தி வருகிறார். நூற்றுக்கணக்கான மாணவர், மாணவிகளுக்கு அவர்களின் தனித்தன்மை வெளி கொண்டு வரும் வகையில் முழுமையான கல்வியை நவீன தரத்துடன் அளித்து 'புதுக்கோட்டை மாவட்டத்தின் மாதிரி பள்ளி' என்ற அந்தஸ்தை பெறுவதற்கு ஒரு கிரியா ஊக்கியாக இருக்கிறார்.

**4. தமிழகத்தின் தலைசிறந்த வீட்டு நூல் நிலையம்**

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும், கலைச் செல்வங்கள் அனைத்தையும் கொணர்ந்து சேர்ப்பீர் " என்ற வாக்குக்கு இணங்க, தனி ஒரு மனிதனாக கடந்த முப்பது ஆண்டு காலமாக இவர் எட்டு திக்கும் பயணம் செய்து ஞான நூல்களை தேடி, தேனி சேர்ப்பது போல் சேர்த்தார். இன்று இவருடைய வீடு அரிய நூல்களின் சங்கமம்... அறிவு பெட்டகம்! துளசி.கே.பாலசுப்பிரமணியனின் வீடு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஞான நூல்களால் ஆனது !!

## திருவாளர் புத்தகப் பிரியன் ( Mr Book Lover )

திருச்சி ரோட்டரி சங்கம் இவரது வீட்டு நூலகத்தை பாராட்டி **திருவாளர் புத்தகப் பிரியன் ( Mr Book Lover )** என்ற பட்டத்தை 2014 ம் ஆண்டு புத்தக கண் காட்சியில் அளித்து சிறப்பித்தது.

## Mini Empire of Books

"THE HINDU ஆங்கில பத்திரிக்கை" இவருடைய நூலகத்தின் சிறப்பைப் பற்றி **"Mini Empire of Books"** என்ற முழுப் பக்க கட்டுரை வெளியிட்டு, இவருடைய நூலகத்தில் பெருமையை, 30 வருட புத்தக வாசிப்பு தவத்தை உலகத்திற்கு வெளிச்சம் போட்டு காட்டியது.

## ஒரு இலட்ச புத்தக காதலன்

"தி இந்து தமிழ் பத்திரிக்கை" இவருடைய நூலகத்தை **" ஒரு இலட்ச புத்தக காதலன் "** என்று வர்ணித்து முழு பக்க கட்டுரையை வெளியிட்டு, ஒவ்வொரு வீட்டிலும் எதிர்காலத்தில் இத்தகைய ஆரோக்கிய வீட்டு நூல் நிலையம் அமைத்து, தமிழன் புத்தக வாசிப்பை நேசித்து அறிவு விசாலம் பெற ஆரோக்கிய பொழுது போக்கு பாதையை காண்பித்தது.

## ஒரு இலட்ச புத்தக அறிவு திருக்கோயில்

''தினந்தந்தி பத்திரிக்கை'' ஞாயிறு மலரில் **''ஒரு இலட்ச புத்தகங்களுடன் அறிவு திருக்கோவில்''**, திருச்சியில் வீடு ஒன்று அறிவு திருக்கோவிலாக விளங்கி வருகிறது. அங்கு ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் இருக்கின்றன.

அந்த அறிவு ஆலயத்தை நடத்துபவர், அத்தனை புத்தகங்களையும் படித்து அதில் உள்ள முக்கிய விஷயங்களை அடிகோடிட்டு குறிப்பு வரைந்து வைத்துள்ளர். அவர் பெயர் : துளசி கே. பாலசுப்பிரமணியன். இன்டர்நெட் உலகத்தில் ஒரு இலட்சம் புத்தகங்களால் ஆன வீடு ! என்று இவருடைய நூல் நிலையத்தின் சிறப்பை வர்ணித்து உலக தமிழன் அதிக அளவில் புத்தகங்களை படிக்கவும், படித்த நல்லப் புத்தகங்களை பொக்கிஷமாக பாதுகாக்கவும் , தங்களுடைய 17 உலக பதிப்புகளிலும் இவருடைய பேட்டியை வெளியிட்டு இளைஞர்களின் ஆரோக்கிய புத்தக வாசிக்கும் பழக்கத்திற்கு மேலும் உத்வேகம் அளித்தது.

## 5. மேலாண்மை ஆலோசகர் ( Management Consultant )

துளசி கே.பாலசுப்பிரமணியன் அவர்கள் "கிரியேடிவ் மேனேஜ்மெண்ட் கன்சல்டன்சி " என்ற நிறுவனத்தை 1993 ஆம் ஆண்டில் தொடங்கி, தற்பொழுது 75 க்கும் மேற்பட்ட வியாபார நிறுவனங்களுக்கு, தொழில் மற்றும் மேலாண்மை ஆலோசகராக உள்ளார்.

**6. மேலாண்மை பேராசிரியர் (Management Professor)**

தமிழகத்தில் 15 க்கும் மேற்பட்ட பல்கலைகழகங்கள், 30 க்கும் மேற்பட்ட மேலாண்மை கல்லூரிகளுக்கு கௌரவ எம்.பி.ஏ (MBA) பேராசிரியராக, 40க்கும் மேற்பட்ட மேலாண்மை பாடங்களை போதிக்கிறார். கடந்த 22 ஆண்டுகளில் 15,000 க்கும் மேற்பட்ட எம்.பி.ஏ (MBA) மாணவர்களை உருவாக்கியவர்.

**7. மனித வள மேம்பாடு பயிற்சியாளர் (Corporate Trainer)**

கடந்த 16 ஆண்டுகளில் திருச்சியில் பெல் என்ற BHEL, HRDC நிறுவனத்தில் மட்டும் 6,500 ஊழியர்கள், பொறியாளர்கள், மேலாளர்களுக்கு வாழ்வில் மாற்றத்தை தன்னம்பிக்கை மற்றும் மேலாண்மை பயிற்சி மூலம் ஏற்படுத்தியவர்.

**8. மேலாண்மை புத்தக எழுத்தாளர் (Management Book Writer)**



27 மேலாண்மை புத்தகங்களை ஆங்கில மொழியில் எழுதியுள்ளார். இவருடைய மேலாண்மை புத்தகம் (Enterprise wide Information System) பாரதிதாசன் பல்கலைகழகத்தில் BCA, B.Sc., (IT) பயிலும் மாணவர்களுக்கு ஒரே பாட புத்தகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.



தற்பொழுது டில்லி Ane Books என்ற நிறுவனத்திற்கு, உலகம் தரம் வாய்ந்த " Strategic Management " என்ற புத்தகத்தை சென்னை B.S.Abdul Rahaman University எழுத்தாளர் முகவை மூலம் எழுதிக் கொண்டு இருக்கிறார்.

**9. சுயமுன்னேற்ற புத்தக எழுத்தாளர் ( Self Development Book Writer)**

துளசி கே.பாலசுப்பிரமணியன் அவர்கள் **“பாதம் பதிப்பகம்”** என்ற நிறுவனத்தை நிறுவி இதுவரை பத்து தன்னம்பிக்கை நூல்களை தமிழ் மண்ணிற்கு அளித்துள்ளார். தன்னம்பிக்கை நூல்களின் மூலம்.... ஒரு இலட்சம் பிரதிகளின் விற்பனை மூலம் தமிழகத்தில் உள்ள ஒரு இலட்சம் இளைஞர்களின் வாழ்வில் தன்னம்பிக்கை ஒளி ஏற்றியவர்.

## 10. சிந்தனை சிற்பி - இணைய தளம்

இவருடைய www.chinthanaicirpi.blogspot.com என்ற இணைய தளம் தமிழ் மொழியின் 50 சிறந்த இணைய தளங்களில் ஒன்று !

இவருடைய 1200 பக்கங்கள் கொண்ட 10 தன்னம்பிக்கை புத்தக பதிவுகளை உலகின் 65 நாடுகளில் இருந்து தமிழர்கள் 28,850 முறை பார்த்து பயன் பெற்று உள்ளனர்.

## 10. துளசி மூச்சு புத்தக எழுத்தாளர் (Environmental Book Writer)

**"துளசி பப்ளிகேஷன்ஸ்"** என்ற நிறுவனத்தை தொடங்கி உலக மக்கள் அனைவரும் பயன்பெரும் பொருட்டு துளசியின் அற்புதங்களை 13 க்கும் மேற்பட்ட தலைப்புகளில் எழுதி வெளியிட்டு 1,00,000 பிரதிகளை கடந்த ஒரு ஆண்டுகளில் மட்டும் விற்று தமிழகத்தின் பல இலட்ச வீடுகளில் துளசி ஆரோக்கிய தீபத்தை ஏற்றி உள்ளார்.

